## தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் - 2017

தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்து மாற்றக் கூற்று மற்றும், காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை நிதிக்கூற்றுக்கள் தோற்றுக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 பெறவேண்டிய கணக்குகள்

பல்கலைக்கழக சேவையிலிருந்து விலகிய இரண்டு அலுவலர்களிடமிருந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக பெறவேண்டியிருந்த ரூபா 10,650 கூட்டுத்தொகையான பண்டிகை மற்றும் விசேட முற்பண கடன் மீதிகளை அறவிடுவதற்கு கம்பனி மீளாய்வாண்டிலும் தவறியிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 104 ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்ட உடன் அளவு மற்றும் காரணங்களை தீர்மானிப்பதற்கும் அதற்கு பொறுப்பானவர்கள் தீர்மானிப்பதற்கும் மேற்கொள்ளும் விசாரணைகள் மீது அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் நடைபெற்ற வாகன விபத்துக்கள் தொடர்பில் 03 சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பல்கலைக்கழகத்தில் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 3,825,746 பற்றாக்குறையாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 214,709 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 4,040,455 குறைவொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் கிரயம் ரூபா 37,708,090 ஆல் அதிகரித்தும் சேவைக் கிரயம் ரூபா 13,346,754 ஆல் அதிகரித்தும் இருந்தமையே மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 3,123,062 ஆகவிருந்த மிகை 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 3,825,746 பற்றாக்குறையாகவிருந்தது. எனினும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை நிதிசார் விளைவுகளில் சீராக்கல் செய்யும் போது 2013 ஆம் ஆண்டிலிருந்த ரூபா 158,465,726 பங்களிப்பானது மீளாய்வாண்டில் ரூபா 267,711,572 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் பெறுகைகள் மற்றும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவை வருட ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் சீராக்கப்பட்டமையால் பல்கலைக்கழகமானது சொந்த தேவைப்பாடுகளை இனங்காணாமல் பெறுகைத் திட்டத்தை முறையாக தயாரித்திருந்ததுடன் நிதிக்கட்டுப்பாடாக இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

#### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) நோக்கங்களை அடைவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்கலைக்கழகத்தால் தற்போது நடாத்தப்படுகின்ற 13 பட்டப் பாடநெறிகள் மற்றும் 11 டிப்ளோமா பாடநெறிகளில், 03 பட்டப் பாடநெறிகள் மற்றும் 02 டிப்ளோமா பாடநெறிகள் மாத்திரம் அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தது.

(ii) 2008 இன் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 21(1) ஆம் பிரிவு மற்றும் மன்றத்தின் 2010 மே 18 ஆந் திகதிய தீர்மானத்தின் பிரகாரம், நிர்வாகம், அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு போன்றவற்றிற்கான மன்றமானது உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொறியியலாளர் நிறுவகத்திடமிருந்து பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பட்டப் பாடநெறிகளிற்காகவும் மற்றும் அதற்கு மேலதிகமாக மொறட்டுவ, பெரதேனியா, மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களிடமிருந்தான ஏனைய பாடநெறிகளிற்காகவும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும், மதிப்புள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிடமிருந்து அங்கீகாரத்தை பெறுவதற்கும் தீர்மானித்திருந்தது. பல்கலைக்கழகமானது தொடங்கியதிலிருந்து 08 வருடங்கள் ஏற்கனவே கடந்த போதிலும், பட்டப்பாடநெறிகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட 09 பட்டப்பாடநெறிகள் தொடர்பில் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை பதிவு செய்த மாணவர்களில் முதல் தடவையில் சித்தியடைந்த சதவீதம் ஆகக்குறைந்த மட்டத்தில் இருந்ததுடன் சித்தியடைந்த சதவீதமானது 19 சதவீதத்திலிருந்து 57 சதவீத வீச்சிலிருந்தது.

(இ) பல்கலைக்கழகம் தொடங்கியதிலிருந்து டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் மாணவர்களை ஒரேயொரு டிப்ளோமா பாடநெறிக்காக மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இருந்த போதிலும், அத்தகைய பாடநெறிகள் நடாத்தாமை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நடாத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறிகளின் மாணவர்களின் சித்தியடைதலானது ஆகக் குறைந்த மட்டத்திலிருந்ததுடன் அத்தகைய பாடநெறிகளை பூர்த்தி செய்வதில் நீண்டகால காலதாமதங்களும் அவதானிக்கப்பட்டது.

## (ஈ) திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை (எஸ்எஸ்டிபி) அமுல்படுத்தல்

தொழில்சார் பயிற்சித்துறையுடன் முன்னேற்றத்திற்காக அமுல்படுத்தப்பட்டு வருகின்ற திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 10 பிரதான நடவடிக்கைகளின் கீழ் 22 உப நடவடிக்கைகளினை நிறைவேற்றுவதற்காக ரூபா 290.7 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகமானது அதனுடைய 18 நடவடிக்கைகளின் நிறைவேற்றலிற்காக ரூபா 140.55 மில்லியனை செலவழித்தது. இது தொடர்பில் நடாத்தப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகளில் மீளாய்வாண்டின் போதுள்ள பதவியணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் சிரேஸ்ட மற்றும் இரண்டாந்தர மட்டம் ஒவ்வொன்றிலும் 04 வெற்றிடங்கள் இருந்ததுடன் 06 பல்கலைக்கழக கல்லூரிகளிற்கான கல்விசார் பதவியணி வெற்றிடங்களாக 35 விரிவுரையாளர்கள், 21 செய்முறையான மற்றும் 01 ஆலோசனையாளர் பதவி காணப்பட்டதுடன் 20 கல்விசாரா பதவிகள் வெற்றிடங்களும் காணப்பட்டது.

(ii) செயற்திட்டத்தின் கீழ் பொது மற்றும் தனியார் பங்குடமை பல்கலைக்கழக கல்லூரிகளை உருவாக்குவதற்காக ரூபா 07 மில்லியன் தொகை ஏற்படு செய்யப்பட்டிருந்த போதும் அத்தகைய நிதியங்களை பயன்படுத்துவதன் மூலம் உரிய நடவடிக்கை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 06 பல்கலைக்கழக கல்லூரிகளில் இயலாமை மக்களுக்கு வசதிகளை வழங்குவதற்காகவும் அக் காணொளி மாநாட்டு முறைமையொன்றினை ஸ்தாபிப்பதற்காகவும் ரூபா 120 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அதற்காக ரூபா 74.02 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய நடவடிக்கை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) இனங்காணப்பட்ட முன்னுரிமை துறைகளுடன் தொடர்பாக பட்டப்பாடநெறிகளை நடாத்துவதற்கும் சுற்றறிக்கைகளை விருத்தி செய்வதற்காக மதிப்புள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து வழிகாட்டல்களை பெறுவதற்குமாக ரூபா 01 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய 02 பட்டப்பாடநெறிகள் கணக்காய்வுத் திகதியான 2017 மே 21 வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், சுற்றறிக்கையானது 2016 ஆம் ஆண்டில் ஒரேயொரு பட்டப் பாடநெறிக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் விரிவுரையாளரொருவர் 2016 ஆம் ஆண்டிலிருந்து பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 0.05 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் இது இந்த நடவடிக்கைக்காகவிருந்தது என கணக்காய்வில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுப் பட்டத்தை கொண்ட விரிவுரையாளரொருவர் விருந்தோம்பல் பட்டமொன்றிற்காக 2016 யூன் 15 இலிருந்து வேலைக்கமர்த்தப்பட்ட போதிலும் 2018 மே 21 ஆந் திகதியான கணக்காய்வு திகதி வரையிலும் அத்தகயை பாடநெறிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. வேலைக்கமர்த்தப்பட்ட திகதியிலிருந்து மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களிற்காக சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 2,464,214 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், நோக்க நடவடிக்கையானது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் உதவி நிதியாளராக கடமையாற்றிய உத்தியோகத்தரொருவர் 2012 ஏப்ரல் 05 இல் வேலையிலிருந்து வெற்றிடமாகவிருந்ததுடன் அவரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 763,176 தொகை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு திருப்பப்பட வேண்டிய அரையாண்டு அறிக்கைகள் தொடர்பாக காலதாமதங்களால் நிறுவனத்தால் செலுத்த வேண்டிய ரூபா 589,164 மிகையறவீட்டை கணக்காளர் மற்றும் முன்னைய பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு 2012 யூன் 22 ஆந் திகதிய ஆரம்ப விசாரணை அறிக்கையில் பிரேரிக்கப்பட்ட போதிலும், அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விசாரணை அறிக்கையின் பிரகாரம், சட்ட நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாமையால், சட்ட நாயக திணைக்களத்திடமிருந்து விசாரணை செய்யப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பாக 2014 பெப்ரவரி 10 ஆந் திகதியளவிலும் அந்த சட்டவழக்கு நடவடிக்கை பரிந்துரைக்கப்பட்டதாகவிருந்தது என 2017 நவம்பர் 22 ஆந் திகதிய சட்டமாநாயகத்தின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) பணிக்கொடை அதிகாரச்சட்டத்திற்கான ஏற்பாட்டின் 23 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த நிறுவனத்திற்கு உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டிய பணமேதும் இருப்பின் இது செலுத்தப்பட்டதிலிருந்து அத்தகைய நிறுவகத்தின் மானிய தொகையை நிலைநிறுத்த செய்வதற்கு சாத்தியங்கள் இருந்தாலும், இது சட்ட நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அறவிட வேண்டிய பணததை அறவிடாமல் 2013 மார்ச் 20 இல் பணிக்கொடையாக ரூபா 108,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) சிறப்பு நீதிமன்ற தொகுதி சபை முகாமைத்துவம் இந்த ஊழியர் மேலும் வேலைக்கமர்த்தப்படுகின்றார் எனவும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது நிர்வாக முறை அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் அந்தப் பணத்தை அறவிடுவதற்கான இயலுமையை கொண்டுள்ளது எனவும் சட்டநாயகத்தின் மேற்கூறப்பட்ட கடிதத்தால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், முறையான நடவடிக்கைகள் இது தொடர்பில் இன்றுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் ரூபா 800,000 ஐ செலவழிப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட தாபன விதிக் கோவையை நிறைவேற்றுவதற்கு வேண்டப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியானது கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தின் உதவி ஆசிரியரானவர் பல்கலைக்கழகத்திற்கு இணைத்தலில் நீதியற்ற தன்மையை ஏற்படுத்தியிருந்தமையால் வேலையை விட்டுச் செல்வதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும், பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட நிதியங்களுடன் தொடர்பான ரூபா 4,684,315 முறி செலுத்தப்பட்டவரை ஏற்றுக்கொள்ளப்பட முடிந்திருக்கவில்லை. எனினும், இந்த முறியை செலுத்த இயலாமை இருந்தமையால் அந்த நபர் மீண்டும் சேவையில் இணைந்திருந்த போதிலும், உரிய உத்தியோகத்தர் அதற்கு இணங்காமல் ஊழியர் தீர்வுச் சபையில் வழக்கொன்றை தொடுத்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய கட்டளையின் பிரகாரம், மீண்டும் ஈடுபடுவதற்கும் 02 வருடங்களிற்கு நிலுவைகளாக சம்பளங்களை செலுத்துவதற்கும் கட்டளையிடப்பட்டது. அதற்கிணங்க முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகளில் பல்கலைக்கழகமானது ரூபா 596,040 தொகையை சம்பளமாகவும் நிலுவையில் ரூபா 542,500 தொகையை சட்டச் செலவீனங்களாகவும் நிலுவையில் செலுத்த வேண்டியிருந்தது.

**(உ) பல்கலைக்கழக கல்லூரிகளிற்காக பிரதம நிறைவேற்றுஉத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்தல்**

---

(i) ஓய்வு அடிப்படையில் தொடர்பாக விடுமுறையின் பின்னர் தேசிய பல்கலைக்கழகங்களிடமிருந்து வந்த உத்தியோகத்தர்கள் வாற்றன்ஹல மற்றும் மாத்தறை பல்கலைக்கழகங்களிற்கான பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் அவர்கள் தற்காலிகமாக சேவையாற்றுவதற்காக பல்கலைக்கழகத்தால் விடுவிக்கப்பட்ட காலத்தை மிஞ்சி 02 சந்தர்ப்பங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ii) காட்சி மற்றும் அழகியற் கற்கைகளில் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பதவியை கொண்டிருந்த உத்தியோகத்தரொருவர் 2016 செப்தெம்பர் 01 இலிருந்து ஓய்வு விடுமுறை அடிப்படையில் வாற்றன்ஹல பல்கலைக்கழக கல்லூரியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரொருவராக வேலைக்கமர்த்தப்பட்டிருந்த போதிலும் 2016 ஒக்தோபர் 12 இல் பல்கலைக்கழகத்திடமிருந்து அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். அதற்கிணங்க, அத்தகைய நியமங்களானது தற்காலிக சேவையிலிருந்து உத்தியோகத்தரொருவரை விடுவிப்பதற்கு முன்னர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) பல்கலைக்கழக கல்லூரிகளிற்கான 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பிவியல் பல்கலைக்கழகத்தின் கட்டளைச் சட்டத்தின் 6.2(அ) பந்தியின் பிரகாரம், குறித்த காலத்திற்கு முன்னர் விட்டுச்செல்லல் அல்லது இடைநிறுத்தினாலன்றி, இயக்குனரானவர், நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் அல்லது 60 வயதில் எது முதலில் பூர்த்தி செய்யப்படுகின்றதோ அந்தக்காலப்பகுதி வரை இயக்குனர் சொந்தப் பதவியை கொண்டிருக்க வேண்டும். எனினும், 2016 செப்தெம்பர் 01 இல் வாற்றன்ஹல வின் பல்கலைக்கழக கல்லூரிக்காக பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் சேவைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர் ஓய்வு விடுமுறையில் இறுதியான 2018 பெப்ரவரி 01 இல் கல்லூரியின் நியமனக் காலப்பகுதியினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் சேவையிலிருந்து வேலையை விட்டுச் சென்றார். அதற்கிணங்க, கல்லூரிகளுக்கு தொடர்ச்சியான சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தமையால் எப்படி நிர்வாக நடவடிக்கைகளை வினைத்திறனாக பராமரிக்கப்பட்டதை கணக்காய்விற்கு ஐயத்திற்குரியதாகவிருந்தது.

**(ஊ) பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளிற்காக நிர்வாக மற்றும்கணக்காய்வு ஆலோசனையாளர்களை நியமித்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல், 04 பல்கலைக்கழக கல்லூரிகளிற்காக மாதாந்தம் ரூபா 75,000 அடிப்படையில் 04 நிர்வாக ஆலோசனையாளர்களும் ரூபா 100,000 அடிப்படையாளர் கணக்காய்வாளரும் முறையே 12 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளிற்காக ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(ii) அனுமதி பெறப்பட்டிருக்காத மேற்கூறப்பட்ட வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கான வேலைக்கமர்த்தல் திட்டத்தினால் 04 நிர்வாக ஆலோசனையாளர்கள் மற்றும் கணக்காய்வாளரின் தகைமைகளை கணக்காய்வில் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(எ) பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பிரிவிற்கான ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் மார்ச் 02 இல் 46 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 5,841,172 பெறுமதியான கணனிகள் மற்றும் உபகரணங்கள் நோக்கத்தில் ஏனைய பிரிவுகளிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) பல்கலைக்கழகம் தொடர்பில் என்ன சமூக பொறுப்புக்கள் உள்ளன என்பதை குறிப்பாக அடையாளங்களை முடிந்திருக்காததுடன் நலன்புரி சமூகத்தின் வருடாந்த சுற்றுலாவிற்காக சமூக பொறுப்பின் கீழ் ரூபா 300,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் பெறுபேறுகளை 03 மாதங்களினுள் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பரீட்சைகளின் திருத்தும் தாள்களை மதிப்பிடுவதற்கான 01 மாதம் தொடக்கம் 09 மாதங்கள் காலப்பகுதி செலவழிக்கப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்டவாறு காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்காததுடன் காலதாமதங்களை தவிர்ப்பதற்கான முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருகை தரும் விரிவுரையாளர்களை பட்டப் பாடநெறிகளிற்காக நியமித்தல்**

---

(i) வார இறுதி நாட்களில் பட்டப் பாடநெறிகளிற்காக பல்கலைக்கழகம் மாணவர்களை சேர்த்திருந்த போதிலும், உள்ளக விரிவுரையாளர்களின் கற்கை வேலைத்திட்டங்கள் மற்றும் நேர அட்டவணைகளின் பிரகாரம் கிழமை நாட்களில் பட்டப் பாடநெறிகளை நடாத்துவதற்காக பல விரிவுரை மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. கற்கை வேலையை திட்டமிடுவதில் கவனம் செலுத்தாமையால் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் 49 உள்ளக விரிவுரையாளர்கள் இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது வருகை தரும் விரிவுரையாளர்களிற்காக ரூபா 18,642,743 தொகையை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

| பாடநெறி காலம் | பட்டப் பாடநெறிகளின் எண்ணிக்கை | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | விரிவுரையாளர்களிற்கான ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | உள்வாரி | வெளிவாரி |
| வார நாட்கள் | 10 | 397 | 7662 | 4882 |
| வார இறுதி நாட்கள் | 13 | 489 | 2244 | 10819 |

(ii) அதற்கிணங்க, பல்கலைக்கழகத்தின் 2017/2018 ஆம் கல்வியாண்டு தொடர்பில் சேர்க்கப்பட்ட மாணவர்களிற்காக நடாத்தப்பட்ட அடித்தள நிகழ்ச்சித்திட்டத்தின் 534 விரிவுரை மணித்தியாலங்களிற்காகவும் 2014/2015, 2015/2016, 2016/2017 போன்ற கல்வியாண்டு தொடர்பில் உட்சேர்க்கப்பட்ட மாணவர்களிற்கான 17,674 விரிவுரை மணித்தியாலங்களிற்காகவும் வருகை தரும் விரிவுரையாளர்களிற்கு நியமனம் வழங்கப்பட்டது.

## 4.4 விளைவற்ற மற்றும்குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான பணிப்பாளர் நாயகத்தின் அலுவலக வதிவிடல் 2012 நவம்பர் இலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பயன்படுத்தாமல் விளைவற்றிருந்தது.

## 4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஒக்தோபர் 12 இல் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினுள் உத்தியோகத்தர்களை உட்சேர்க்கும் போது தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத கல்விசார் உத்தியோகத்தர்களின் 10 உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் இந்தப் பதவிக்காக உட்சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், பல்கலைக்கழகம் தொடங்கியதிலிருந்து 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தனிப்பட்ட ரீதியில் இந்தப் பதவிக்காக உட்சேர்க்கப்பட்ட 06 உத்தியோகத்தர்கள் தேவையான தகைமைகளை இதுவரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் வேலைக்கமர்த்தப்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் - தரம் ஐ இன் 02 உத்தியோகத்தர்களிற்கான ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் தேவையான தகைமைகளை நிரூபிக்க முடிந்திருக்கவில்லை.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தி

## 5.1 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கு

நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ஐக்கிய தேச வருடம் 2030 ‘‘நிகழ்ச்சித்திட்டம்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனங்களாலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டுடன் தொடர்பான நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகள் எப்படி அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

அதற்கிணங்க, நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் இலக்குகளை அடைவதற்கான எல்லையாக மற்றும் சமமானதர கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டில் தர தொழில்நுட்பவியல், தொழில்சார், மற்றும் இரண்டாந்தர கல்விக்காக அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களிற்கான சமமான அணுகுமுறையை உறுதிப்படுத்தி அனைவருக்கும் ஆயுள் முழுவதுமான கற்கை சந்தர்ப்பங்களை மேம்படுத்தல் இனங்காணப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பல்கலைக்கழகத்தை பல்கலைக்கழகத்தினுள் மாற்றுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளானது நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளாக இனங்காணப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக்கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு போதிளவு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்காததுடன் இணைப்பு உத்தியோகத்தர் மற்றும் எழுதுனர் தரத்திலுள்ள உத்தியோகத்தரொருவர் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2011 திசெம்பர் 23 ஆந் திகதிய பீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 132(2)(அ)(1) இற்கு கவனஞ் செலுத்துவதன் மூலம் பல்கலைக்கழகத்தின் இலக்கு எல்லைகளை அடைதல், நிதி மற்றும் செயற்பாடு பரப்பிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டின் மதிப்பீடு போன்ற விடயங்களை மேவுகை செய்வதற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பல்கலைக்கழக முன்னைய கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக மேலதிக நேரம் செலவழிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. 10 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செய்முறை

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டியின் 3.6.1 ஆம்பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டின்போது 02 சந்தர்ப்பங்களில் ரூபா 1,130,160 பெறுமதியான பொருட்களை மீள கட்டளையிட்டு கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், பெறுகை செய்யும் போது 03 விலைமனுக்களை ஆகக்குறைந்தது பெறவேண்டிய போதிலும் அதற்கு முரணாக, நூலக முகாமைத்துவ மென்பொருளானது ஒருவிலைமனுவை அடிப்படையாகக் கொண்டு ரூபா 420,000 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க, பெறுகையானது போட்டி நிலைமையொன்றிற்கு தள்ளப்பட்டிருக்காததுடன் ஆகையால், 2015 ஏப்ரல் 27 இல் பெறப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு 2016 மே 25 இல் கொள்வனவு செய்வதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்த போதிலும், தொழில்நுட்ப மாற்றல்கள், விலைகளில் மாற்றங்கள் மற்றும் அந்தக் காலப்பகுதியின் போது ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளிலுள்ள மாற்றங்கள் என்பவை தொடர்பில் குழுவானது கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

**(இ) 38 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 38 வளிப்பதனாக்கி இயந்திரங்களானது பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற பதிவிடல் ஸ்ரூடியோ இற்கு பொருத்துவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 10,510,000 செலவழித்து 38 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் திட்டத்திற்கு புறம்பாக அதனுடைய 03 இயந்திரங்கள் துணை வேந்தரின் அலுவலக வதிவிடத்திற்கு பொருத்தப்பட்டிருந்தது.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் விலைமனுக்களை கோருவதற்காக தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியல் குறிப்புரைகளில் உள்ளடக்கப்பட்ட பல்கலைக்கழக தேவைப்பாடுகளுக்கு புறம்பாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புரைகளின் பட்டியலுடன் இணங்கும் வகையில் தொழில்நுட்ப மதிப்பீடுகளிற்காக அளவீட்டுப் பட்டியல் மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களால் தயாரிக்கப்பட்ட விதப்புரைகளில் உள்ளடக்கப்பட்ட விதப்புரைகளிற்கு புறம்பாக, ரூபா 13,805,838 தொகையான திருத்தங்கள் மற்றும் கொள்வனவுகள் 04 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் கடமைகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் தரம் பற்றி கணக்காய்வில் திருப்திகொள்ள முடிந்திருக்கவில்லை.

**(உ) புகைப்பட பிரதி இயந்திரங்களை கொள்வனவு செய்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 மே 12 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினது ஒவ்வொன்றினதும் 153,000 (வரிகள் இல்லாமல்) இல் 2 புகைப்பட பிரதி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு பிரேரித்திருந்த போதிலும், விலைமனுக்களை சமர்ப்பித்த 05 நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்களால் சமர்ப்பித்த விலைமனுக்களானது பல்கலைக்கழகத்தால் கருதப்பட்ட விதப்புரைகளுடன் இணங்கவில்லையென என குறிப்பிட்டு மதிப்பீட்டுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, 02 புகைப்பட பிரதி இயந்திரங்கள் அதிகுறைந்த விலைமனு சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து 2017 மே 22 இல் ரூபா 351,900 இல் (வரியுடன்) 02 புகைப்பட பிரதி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம், நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைமனுக்களிற்கான இயந்திரங்கள் தொடர்பிலான வாகனங்கள் மீளமைத்தல் கிரயம் மற்றும் புகைப்பட பிரதியொன்றிற்கான அலகுக் கிரயம் போன்றன தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை செய்யும் நிறுவனத்தினால் புகைப்பட பிரதி இயந்திரத்திற்காக கொடுக்கப்பட வேண்டிய 03 வருடகாலப்பகுதி கடந்த பின்னர் ஏற்படுகின்ற சேவை மற்றும் பராமரிப்பு செலவினங்கள் தொடர்பானவற்றை தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஊ) பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மற்றும் துப்பரவு சேவைக்கான உடன்படிக்கைக் காலமானது முடிவடைந்திருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் ஆளுனர்கள், சபையின் அங்கீகாரமில்லாமல் பெறுகை குழுவால் உடன்படிக்கை காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 6.2.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திற்கு சேர்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் நோக்கத்துடன் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட கற்கை வளங்கள் அபிவிருத்தி நிலையத்திற்காக ரூபா 260.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் இயலுமையை கட்டியெழுப்புதல், கற்கை சூழல் மற்றும் பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளல் போன்ற நிர்மாணங்கள் இது வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 21.79 மில்லியன் பெறுமதியான உபகரணமானது நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத கட்டிடத் தொகுதிக்காக மீளாய்வாண்டின் போதுகொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த உபகணரம் விளைவற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வவ்போது பல்கலைக்கழகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதியங்களை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த தவறியமை |
| (ஆ) பதவியணி நிர்வாகம் | (i) உரிய நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களினூடாக உத்தியோகத்தர்களின் தகைமைகளை சரிபார்க்க தவறியமை<br>(ii) ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைஎடுக்க தவறியமை<br>(iii) வெளிநாட்டு பயிற்சிகளிற்காக பங்குபற்றிய அலுவலகர்களால் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறியமை |
| (இ) வாடகை கட்டுப்பாடு | அகற்றல்களுடன் தொடர்பாக சுற்றறிக்கைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு தவறியமை. |